**175. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடு.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) பம்பாய் ரயில் நிலையம் | 1. 1873 |
| (b) ராயபுரம் ரயில் நிலையம் | 2. 1908 |
| (c) சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் | 3. 1853 |
| (d) எழும்பூர் ரயில் நிலையம் | 4. 1856 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

**176. அரசியலமைப்பு நிர்ணய சபையின் வழிகாட்டு குழுவின் தலைவர் யார்?**

(A) ஜவஹர்லால் நேரு

(B) K.M. முன்சி

(C) H.C. முகர்ஜி

(D) ராஜேந்திர பிரசாத்

**177. இந்திய அரசியலமைப்பு எந்த விதி ஆரம்பக் கல்வியுரிமையோடு தொடர்புடையது?**

(A) விதி 20 (a) (B) விதி 21 (a)

(C) விதி 22 (a) (D) விதி 21

**178. பின்வரும் கூற்றினை, அதற்கு உகந்த தேர்வுகளோடு பூர்த்தி செய்து, சரியான தெரிவினை தேர்ந்தெடு.**

**மாநில தலைமை தகவல் ஆணையரை நியமிக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்யும் குழு இவற்றை உள்ளடக்கியது**

1. முதல் அமைச்சர்
2. சட்டமன்ற எதிர்கட்சி தலைவர்
3. முதலமைச்சரால் முன்மொழியப்படும் கேபினட் அமைச்சர்
4. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

(A) 1 மற்றும் 2 மட்டும்

(B) 1, 2 மற்றும் 4 மட்டும்

(C) 1, 2 மற்றும் 3 மட்டும்

(D) 1,3 மற்றும் 4 மட்டும்

**179. இந்தியாவின் உச்சநீதிமன்றம் எப்பொழுது திறந்து வைக்கப்பட்டது?**

(A) ஜனவரி 26, 1950 (B) ஜனவரி 28, 1950

(C) பிப்ரவரி 28, 1950 (D) ஏப்ரல் 26, 1950

**180. இந்திய பாராளுமன்றத்தின் பொதுக் கணக்கு குழு தலைவரை நியமனம் செய்பவர் யார்?**

(A) பிரதம மந்திரி

(B) மக்களவை சபாநாயகர்

(C) பாராளுமன்ற விவகார அமைச்சர்

(D) பாராளுமன்ற விவகார குழு

**181. எந்த அரசியலமைப்பு சட்டத்தின் மூலமாக குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் அவைகளை கூட்டுவதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அதிகாரம் உள்ளது?**

(A) விதி 75 (B) விதி 81

(C) விதி 85 (D) விதி 88

**182. கீழ்வருபனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்க:**

| | |
|---|---|
| (a) நிர்மல் பாரத் அபியான் | 1. ஊரக சாலைகள் |
| (b) பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா | 2. அனைத்து வாழ்விடங்களுக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதி செய்து தருதல் |
| (c) கிராம கட்டமைப்பு திட்டம் | 3. கிராம சுகாதாரம் |
| (d) தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு திட்டம் | 4. மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டத்தில் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

**183. கீழ்வருவதில் எந்த ஒன்று, ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச அடிப்படை சேவைகள் (BMS) திட்டத்தில் இடம் பெறவில்லை?**

(A) அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல்

(B) ஆரம்பக் கல்வி அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்

(C) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை வளர்ச்சியடையச் செய்தல்

(D) ஆரம்ப சுகாதார வசதிகள் கிட்டுமாறு செய்தல்

**184. சம அளவு வருமான பகிர்வை காட்டும் புள்ளியியல் குறியீடு.**

(A) தேசிய வருமானம் (B) தலா வருமானம்

(C) கினி கெழு

(D) செலவிடத்தக்க தனிநபர் வருமானம்

**185. பின்வரும் நிதி ஆணையங்களில், மத்திய அரசின் அனைத்து வரிகளின் நிகர வருமானத்தினை மாநிலங்களுக்கு அதிகார பகிர்வு வழங்க பரிந்துரை செய்த ஆணையம் எது?**

(A) 8வது நிதி ஆணையம் (B) 11வது நிதி ஆணையம்

(C) 10வது நிதி ஆணையம் (D) 9வது நிதி ஆணையம்

**186. எந்த இந்திய அரசியலமைப்பு பஞ்சாயத்து ராஜ் திருத்தச்சட்டம் பிரிவு I-ன் படி, 1/3–ல் பங்கு இடம் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பெண்களுக்கான இடம் ஒதுக்கப்பட வேண்டும் என குறிக்கிறது?**

(A) 73–வது சட்டத்திருத்தம்

(B) 74–வது சட்டத்திருத்தம்

(C) 75–வது சட்டத்திருத்தம்

(D) 76–வது சட்டத்திருத்தம்

**187. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.**

| | |
|---|---|
| (a) K.R. அய்யங்கார் | 1. வைக்கம் சத்தியாகிரகம் |
| (b) கேளப்பன் | 2. இந்து மகாசபை |
| (c) எம்.ஆர். மஸானி | 3. மெட்ராஸ் மகாஜன் சபை |
| (d) எம்.எம். மாளவியா | 4. காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

188. 1 ஆண்டிற்கு எந்த வட்டி வீதம் மூலம் ரூ. 1,200 இரண்டு வருடங்களில் ரூ. 1348.32 ஆகும்

(A) 6%

(B) 6.5%

(C) 7%

(D) 7.5%

189. 7 பேர் ஒரு வேலையை தினம் 9 மணி நேரம் செய்து 30 நாட்களில் முடிக்கின்றனர். அதே வேலையை 10 பேர் தினம் 7 மணி நேரம் செய்தால், எத்தனை நாட்களில் முடிப்பர்?

(A) 28 நாட்கள்

(B) 30 நாட்கள்

(C) 32 நாட்கள்

(D) 27 நாட்கள்

190. $5 \oplus 3 = 34$ மற்றும் $6 \oplus 2 = 40$ என தரப்பட்டால், $7 \oplus 1$–ன் மதிப்பு யாது?

(A) 54 (B) 34

(C) 50 (D) 30

191. 6 மணிகள் முதலில் ஒன்றாக அடிக்கும், பின்னர் அவை ஒவ்வொன்றும் 2, 4, 6, 8, 10 மற்றும் 12 வினாடிகள் இடைவெளிவிட்டு அடிக்கும் என்றால், 30 நிமிடத்தில் எத்தனை முறை ஆறு மணிகள் ஒன்றாக சேர்ந்து ஒலித்திருக்கும்?

(A) 4 (B) 10

(C) 15 (D) 16

192. $\frac{a}{b} = \frac{4}{5}$ மற்றும் $\frac{b}{c} = \frac{15}{16}$ எனில், $\frac{c^2 - a^2}{c^2 + a^2}$–ன் மதிப்பு

(A) $\frac{1}{7}$ (B) $\frac{7}{25}$

(C) $\frac{3}{4}$ (D) $\frac{1}{4}$

193. கொடுக்கப்பட்ட தொடரில் பொருந்தாத எண்ணை கண்டறிக 25, 36, 49, 81, 121, 169, 225?

(A) 36 (B) 49

(C) 169 (D) 225

194. A மட்டும் ஒரு வேலையை 12 நாட்களில் முடிப்பார். B என்பவர் A யைக் காட்டிலும் 60% அதிக திறனுடன் வேலை செய்பவர் எனில் B மட்டும் அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

(A) 6 நாட்கள்

(B) 7½ நாட்கள்

(C) 8 நாட்கள்

(D) 8½ நாட்கள்

195. $5^a = 6$; $6^b = 7$; $7^c = 5$ எனில் abc-ன் மதிப்பு என்ன?

(A) 0 (B) –1

(C) 2 (D) 1

196. $\sqrt[x]{\sqrt[y]{\sqrt[z]{a}}}$ –ன் மதிப்பு யாது?

(A) $\sqrt[y]{a^{xz}}$ (B) $\sqrt[xy]{a^{z}}$

(C) $\sqrt[xyz]{a}$ (D) $\sqrt[z]{a^{yz}}$

197. 8% தனிவட்டி வீதத்தில் ₹ 2,000 என்ற தொகை இரட்டிப்பாக மாறுவதற்குரிய காலம் என்ன?

(A) 25½ ஆண்டுகள்

(B) 10½ ஆண்டுகள்

(C) 8½ ஆண்டுகள்

(D) 12½ ஆண்டுகள்

198. ஒரு செவ்வகத்தின் நீளமானது 60% அதிகரிக்கப்படுகிறது. அதன் அகலமானது எத்தனை சதவீதம் குறைந்தால் அதன் பரப்பளவு முந்தைய பரப்பளவை போலவே இருக்கும்?

(A) 37½% (B) 60%

(C) 75% (D) 120%

199. ரூபாய் 53–ஐ *A, B, C* என்ற மூவருக்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது. *A* என்பவர் *B* பெறுவதைக் காட்டிலும் ரூ. 7 அதிகம் பெறுகிறார். *B* என்பவர் *C* –யைக் காட்டிலும் ரூ. 8 அதிகம் பெறுகிறார் எனில், அவர்கள் பெற்ற தொகைகளின் விகிதங்கள்

(A) 16 : 9 : 18 (B) 25 : 18 : 10

(C) 18 : 25 : 10 (D) 15 : 8 : 30

200. ஓர் கூம்பு, ஓர் அரை கோளம் மற்றும் ஓர் உருளை மூன்றும் ஒரே அளவைக் கொண்ட அடிபகுதியையும், சமமான உயரத்தையும் உடையனவாய் உள்ளன. இதன் கன அளவுகளின் விகிதம் காண்க.

(A) 3 : 2 : 1 (B) 1 : 2 : 3

(C) 3 : 1 : 2 (D) 1 : 3 : 2

# விடைகள்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | (D) | 2. | (D) | 3. | (D) | 4. | (B) | 5. | (A) | 6. | (D) | 7. | (C) | 8. | (B) | 9. | (B) | 10. | (D) |
| 11. | (D) | 12. | (A) | 13. | (C) | 14. | (D) | 15. | (D) | 16. | (B) | 17. | (B) | 18. | (D) | 19. | (A) | 20. | (D) |
| 21. | (D) | 22. | (B) | 23. | (C) | 24. | (C) | 25. | (A) | 26. | (C) | 27. | (D) | 28. | (B) | 29. | (D) | 30. | (B) |
| 31. | (B) | 32. | (D) | 33. | (D) | 34. | (D) | 35. | (B) | 36. | (A) | 37. | (B) | 38. | (A) | 39. | (D) | 40. | (D) |
| 41. | (D) | 42. | (D) | 43. | (B) | 44. | (A) | 45. | (C) | 46. | (C) | 47. | (C) | 48. | (A) | 49. | (C) | 50. | (C) |
| 51. | (B) | 52. | (C) | 53. | (C) | 54. | (C) | 55. | (B) | 56. | (C) | 57. | (B) | 58. | (B) | 59. | (C) | 60. | (C) |
| 61. | (D) | 62. | (B) | 63. | (C) | 64. | (B) | 65. | (D) | 66. | (D) | 67. | (C) | 68. | (C) | 69. | (B) | 70. | (B) |
| 71. | (A) | 72. | (B) | 73. | (A) | 74. | (D) | 75. | (B) | 76. | (D) | 77. | (C) | 78. | (D) | 79. | (A) | 80. | (B) |
| 81. | (C) | 82. | (B) | 83. | (C) | 84. | (D) | 85. | (A) | 86. | (A) | 87. | (A) | 88. | (A) | 89. | (B) | 90. | (B) |
| 91. | (D) | 92. | (D) | 93. | (A) | 94. | (D) | 95. | (A) | 96. | (D) | 97. | (B) | 98. | (D) | 99. | (B) | 100. | (B) |
| 101. | (D) | 102. | (A) | 103. | (D) | 104. | (A) | 105. | (C) | 106. | (C) | 107. | (C) | 108. | (B) | 109. | (C) | 110. | (D) |
| 111. | (D) | 112. | (D) | 113. | (B) | 114. | (D) | 115. | (A) | 116. | (B) | 117. | (A) | 118. | (C) | 119. | (B) | 120. | (D) |
| 121. | (A) | 122. | (B) | 123. | (C) | 124. | (C) | 125. | (D) | 126. | (B) | 127. | (C) | 128. | (D) | 129. | (C) | 130. | (C) |
| 131. | (B) | 132. | * | 133. | (A) | 134. | (B) | 135. | (C) | 136. | (D) | 137. | (C) | 138. | (B) | 139. | (B) | 140. | (D) |
| 141. | (B) | 142. | (A) | 143. | (A) | 144. | (A) | 145. | (C) | 146. | (C) | 147. | (A) | 148. | (B) | 149. | (C) | 150. | (D) |
| 151. | (A) | 152. | (A) | 153. | (C) | 154. | (C) | 155. | (C) | 156. | (B) | 157. | (B) | 158. | (D) | 159. | (C) | 160. | (A) |
| 161. | (C) | 162. | (C) | 163. | (B) | 164. | (B) | 165. | (A) | 166. | (A) | 167. | (A) | 168. | (D) | 169. | (C) | 170. | (B) |
| 171. | (C) | 172. | (B) | 173. | (B) | 174. | (A) | 175. | (A) | 176. | (D) | 177. | (B) | 178. | (C) | 179. | (B) | 180. | (B) |
| 181. | (C) | 182. | (A) | 183. | (C) | 184. | (C) | 185. | (B) | 186. | (B) | 187. | (C) | 188. | (A) | 189. | (D) | 190. | (C) |
| 191. | (D) | 192. | (B) | 193. | (A) | 194. | (B) | 195. | (D) | 196. | (C) | 197. | (D) | 198. | (A) | 199. | (B) | 200. | (B) |

நடந்து முடிந்த **TNPSC Group II A** தேர்வில் நடப்பு நிகழ்வுகள் **(Current Affairs)** பகுதியிலிருந்து மட்டும் 19 வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. இதில் நமது சுரா பதிப்பகத்தின் **Exam** மாஸ்டர் புத்தகங்களிலிருந்து மட்டும் 16 வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. இது தவிர நமது **Exam** மாஸ்டரில் வெளியாகும் கட்டுரைகளையும், செய்திகளையும், இன்னபிறவற்றையும் உள்வாங்கி படித்திருக்கும் பட்சத்தில் கூடுதலாக 5 முதல் 10 வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்வு செய்திருக்கலாம். இத்தேர்வில் நடப்பு நிகழ்வுகள் பிரிவில் கேட்கப்பட்ட பல வினாக்கள், எங்கிருந்து கேட்கப்பட்டன என்றே தெரியவில்லை என பலரும் கருத்து தெரிவித்திருந்தபோதிலும் நமது **Exam** மாஸ்டரின் தகவல்களிலிருந்து பெரும்பான்மையான கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாக கூடுதல் கவனத்துடன் தயாரிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட பதிப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கும் நமது **Exam** மாஸ்டரைத் தொடர்ந்து படித்து வாருங்கள், எதிர்வரும் தேர்வுகளுக்கான ஆயத்தப்பணிகளின் போது நீங்கள் நடப்பு நிகழ்வுகளுக்கென தனியாக நேரம் ஒதுக்கி படிப்பது அல்லது கூடுதல் குறிப்புகளை நாடுவது போன்றவற்றிற்கு விடைகொடுத்து விட்டு, கவலையின்றி ஒவ்வொரு போட்டித் தேர்வின் பொது அறிவுப் பகுதியிலும் 20 முதல் 25 சதவிகித மதிப்பெண்களை பெறலாம். போட்டித் தேர்வுகளில் அரை மதிப்பெண்கள் கூட உங்களது எதிர்காலத்தை தீர்மானிக்கும் நிலையில், வினாத்தாளின் எளிதான நடப்பு நிகழ்வுகள் பகுதியை நமது **Exam** மாஸ்டர் உதவியுடன் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்...!

# விரிவான விடைகள்

102) (A) மின் மற்றும் காந்தபுலங்களினால் ஆல்பா கதிர்களை விட பீட்டா கதிர்கள் குறைவாகவும், அதை விட குறைவாக காமா கதிர்களும் விலக்கமடைகின்றன. மேலும் அயனியாக்கும் தன்மையை, ஆல்பா கதிர்கள் மிக அதிகமாகவும் பீட்டா கதிர்கள் அதனை விட குறைவாகவும் காமா கதிர்கள் மிகமிகக் குறைவாகவும் கொண்டுள்ளன. இது போன்ற காரணங்களால் ஊடுருவும் திறனின் ஏறுவரிசை பின்வருமாறு அமையும்.

ஆல்பா கதிர் < பீட்டா கதிர் < காமா கதிர்

103) (D) பட்டியல் 1, பட்டியல் 2, பட்டியல் 3 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள சேர்மங்கள் அவற்றின் தன்மைகள், அவை தயாரிக்கப்படும் முறை, அவற்றின் பயன் போன்றவை கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை சரியாகப் பொருத்தும் பொழுது சரியான விடை கிடைக்கும்.

104) (A) ஜெர்மனைச் சார்ந்த கார்ல் அலெக்ஸாண்டர் நியூபெர்க் (1877 – 56) எனும் தாவரவியல் அறிஞர் உயிர் வேதியியலின் முன்னோடி எனவும், நவீன உயிர் வேதியியலின் தந்தை எனவும் அழைக்கப்படுகின்றார். இவர் கார்பாக்ஸிலேஸைக் கண்டறிந்துள்ளார். இவரின் நினைவாகவே ஃப்ரக்டோஸ் – 6 – பாஸ்பேட் எனும் பிரக்டோஸ் சர்க்கரை, நியுபெர்க் எஸ்டர் என அழைக்கப்படுகிறது.

105) (C) சூபரின் என்பது சிலவகைத் தாவரங்களில் காணப்படும் மெழுகு போன்ற ஒரு வகைக் கொழுப்பு பொருளாகும்.

டானின்கள் என்பவை ஜிம்னோஸ்பெர்ம் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம்களிலிருந்து பெறப்படும் ஒரு வகை வேதிச் சேர்மமாகும். இது மை மற்றும் சாயம் தயாரிப்பிற்கு பயன்படுகிறது.

விலங்குகள் வெளியிடும் நைட்ரோஜீனஸ் கழிவு பொருட்களில் ஆல்கலாய்டுகளும் இடம் பெற்றுள்ளன.

பெக்டின்கள் என்பவை ஹெட்ரோ பாலிசாச்சுரைட்டுகளின் வடிவமைப்பாகும். இவை நில வாழ் தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன. இவற்றைக் கொண்டு பழஜெல்லிகள் தயாரிக்க இயலும்.

106) (C) இனசெல் ஆக்கத்தின் போது உருவாகும் இரட்டை மய செல்கள் ஸ்பெர்மட்டோகோனியா எனப்படும். இது பிரிக்கப்படாத ஆண் இன செல் ஆகும்.

107) (C) பட்டியல் I–இல் நோய்களும், பட்டியல் II–இல் அவற்றினை உண்டாக்கும் தீங்குயிரிகளும், பட்டியல் III–இல் அவற்றின் அறிகுறிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை சரியாக பொருத்தும் பொழுது சரியான விடை கிடைக்கும்.

108) (B) இக்கேள்விக்கான விடையான நமது சுரா பதிப்பகத்தின் TNPSC குரூப் IIA சமீபத்திய செய்திகள் புத்தகத்தின் ஜூன் – ஜூலை மாத பிரிவில் இடம் பெற்றுள்ளது. மேலும் எக்ஸாம் மாஸ்டரிலும் வெளிவந்துள்ளது.

109) (C) இக்கேள்விக்கான விடையான நமது சுரா பதிப்பகத்தின் TNPSC குரூப் IIA சமீபத்திய செய்திகள் புத்தகத்தின் ஜூலை – ஆகஸ்ட் மாத பிரிவில் 65–ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

110) (D) நிஷா என்பது 2008–ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர புயலாகும். அதே போல் ரோனு புயலானது 2015 நவம்பர் 8 முதல் 10 வரை தமிழகம் மற்றும் காரைக்காலைத் தாக்கிய பயங்கர புயலாகும்.

111) (D) **THSD7A - Thrombospondin type I domain Containing 7A**

சி.எஸ்.ஐ.ஆர். தலைமையில் பல்வேறு இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களைச் சார்ந்த விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியினால் இந்தியர்களின் உடல்பருமனுக்கு காரணமான THSD7A எனும் மரபணு கண்டறியப்பட்டுள்ளது.

112) (D) ஆஸ்ட்ரோசாட் பற்றிய விரிவான மற்றும் அரிய விவரங்கள் நமது எக்ஸாம் மாஸ்டர் புத்தகத்தின் நவம்பர் 2015 இதழில் சிறப்புக் கட்டுரையாக வெளிவந்துள்ளன.

113) (B) சானியா–ஹிங்கிஸ் ஜோடியின் வெற்றிகள், சாதனைகள் மற்றும் பங்கேற்ற போட்டிகள் குறித்த விவரங்கள் தவறாமல் நமது எக்ஸாம் மாஸ்டரின் விளையாட்டுச் செய்திகள் பிரிவில் இடம் பெற்று வருகின்றன.

114) (D) செங்கோட்டை சூரிய மின்சக்தி நிலையம் குறித்த விரிவான தகவல்கள் நமது எக்ஸாம் மாஸ்டரின் நவம்பர் 2015 இதழின் 87–ஆவது பக்கத்தில் வெளியாகியுள்ளது.

**115) (A)** இக்கேள்விக்கான விடையானது நமது எக்ஸாம் மாஸ்டரின் பல்வேறு மாத இதழ்களில் வெளிவந்த பல்வகை செய்திகளில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

**116) (B)** இக்கேள்விக்கான விடையும் பித்யா தேவி பண்டாரி பற்றிய இதர தகவல்களும் நமது எக்ஸாம் மாஸ்டர் இதழின் 2015 டிசம்பர் பதிப்பில், முக்கிய நிகழ்வுகளும் தலைவர்களும் எனும் தலைப்பின் கீழ் 122–ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**117) (A)** **BRICS** அமைப்பின் முதலாவது இடப்பெயர்வு பற்றிய மாநாடு சோச்சி, ரஷ்யாவில் 2015 அக்டோபர் 9 அன்று நடைபெற்று. இந்தியாவின் சார்பில் மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ பங்கேற்றார்.

**118) (C)** **CSIR - Council of Scientific and Industrial Research** எனும் மத்திய அறிவியல் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனம் 1942 செப்டம்பர் 26 அன்று நிறுவப்பட்டது. இதன் முதல் தலைவராக புகழ்பெற்ற வேதியியல் அறிஞரான எஸ்.எஸ். பட்நாகர் விளங்கினார்.

**119) (B)** புவியின் மொத்த எடையில் 83 சதவிகிதத்தைக் கொண்ட கவசத்தின் மேல்பகுதி 700 கி.மீ. ஆழம் வரை பரவியுள்ளது. மாக்மா எனும் பாறைக்குழம்புகளைக் கொண்டுள்ளது. இது வெளிக்கவசம், மேல்மேண்டில், அஸ்தினோஸ்பியர் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

**120) (D)** சிக்கிம் மாநிலத்தின் உயிர்நாடி எனப்படுவது இமயமலையின் பஹூன்ரி பனிச்சிகரத்தில் உற்பத்தியாகி சிக்கிம், மேற்கு வங்கம், வங்கதேசம் வழியே சென்று பிரம்புத்ராவுடன் இணையும் தீஸ்தா **(Teesta)** நதி ஆகும். இந்நதி சிக்கிமின் பெரும்பாலான பகுதிகளை வளம்மிக்கதாக மாற்றுகிறது.

**121) (A)** சூரியனை வலம் வருவதில் அதிவேகமாகச் செயல்படும் கிரகம் புதன் ஆகும். இது சூரியக்குடும்பத்தில் சூரியனுக்கு அடுத்தபடியாக உள்ள முதலாவது கோள் ஆகும். புதன் கிரகமானது 87.9 நாட்களில் சூரியனைச் சுற்றி வருகின்றது. அதே நேரம் சூரியனைச் சுற்றி வர வெள்ளி கிரகம் 224.7 நாட்களையும், புவி 365.25 நாட்களையும் எடுத்துக் கொள்கின்றது. மிக மெதுவாக வலம் வரும் கோள் நெப்டியூன் ஆகும். இது சூரியனை ஒருமுறை வலம் வர 60,190.5 நாட்களை எடுத்துக்கொள்கின்றது.

**122) (B)** புவிமேலோட்டில் உருவாகும் மேடுபள்ளங்களால் ஏற்படும் பிண்டமலைகள் ஹார்ஸ்ட் எனப்படுகின்றன.

**123) (C)** கடல்பரப்பின் இதர அமைப்புகளான கண்டத்திட்டு, கண்டச் சரிவு ஆகியவற்றைத் தொடர்ந்து மிகப்பரந்து விரிந்துள்ள கடலின் தரை அமைப்பே ஆழ்கடல் சமவெளிகள் எனப்படும். இவை கடல் ஆழிகளையும், மலைகளையும் உள்ளடக்கியதாகும்.

**124) (C)** நாழி, உரி போன்றவை பிற்கால சோழர்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திரவ அளவைகளாகும். இது தற்காலத்தில் கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படும் "படி"க்கு ஈடானது. ஒரு நாழி என்பது, 1.344 லிட்டருக்கு சமம். அதே போல் ஒரு நாழி என்பது 2 உரிக்கும், ஒரு உரி என்பது இரு உழக்கிற்கும், ஒரு உழக்கு என்பது 2 ஆழக்கிற்கும் சமம்.

∴ 1 நாழி = 2 உரி = 4 உழக்கு 8 = ஆழக்கு

**125) (D)** இந்திய தேசிய கீதத்தினை எழுதிய இரவீந்தரநாத் தாகூர் இலங்கை மற்றும் வங்கதேசத்திற்கான தேசிய கீதத்தினையும் எழுதியுள்ளார்.

இலக்கியத்திற்கான நோபல் பரிசை 1915–இல் பெற்ற இரவீந்தரநாத் தாகூர் நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியர்–முதல் இந்தியர்– மற்றும் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஒரே இந்தியர் எனும் பெருமையைப் பெற்றவராவார்.

**126) (B)** மராத்தியப் பேரரசின் பிரதம அமைச்சர்களாக விளங்கிய பேஷ்வாக்கள் விதவைகளின் மறுமணத்திற்கு 'பாட்டாம்' எனும் வரியை விதித்தனர்.

**127) (C)** இந்தியாவில் மலிந்திருந்த தீண்டாமைக் கொடுமையை எதிர்க்கும் விதமாக 'தீண்டாமையை விட்டொழிக்காமல் ஆங்கிலேயர்களிடம் சுதந்திரம் பெற இந்தியர்கள் தகுதியற்றவர்கள், என்ற கருத்தினை தெரிவித்தவர் மகாத்மா காந்தியாவார்.

**128) (D)** 1971–ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய–சோவியத் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தமானது, 1971–இல் வங்கதேசத்திற்கு சுதந்திரம் பெற்றுத்தர பாகிஸ்தானுடன் ஏற்பட்ட போரினைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும். பனிப்போர் காலத்தில் ஆசிய பிராந்தியத்தின் மிகமுக்கிய ஒப்பந்தமாகக் கருதப்படும் இது, இந்தியாவை தனது அணிசேராக் கொள்கையிலிருந்து விலகி சோவியத் ஆதரவு நிலையை மேற்கொள்ள காரணமானது. இதனால் சீனா, அமெரிக்காவுடனான தனது உறவை மறுபரிசீலனை செய்து வலுப்படுத்தியது.

**129) (C)** சோவியத் யூனியனைப் பின்பற்றி ஐந்தாண்டுத் திட்டத்தினை செயல்படுத்த திட்டக்குழு உருவாக்கப்பட்ட ஆண்டு 1950 ஆகும்.

தேசிய வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களைத் தீட்ட அனைத்து மாநில முதல் அமைச்சர்கள் மற்றும் மத்திய கேபினர் அமைச்சர்களை உறுப்பினர்களாகவும் பிரதமரை தலைவராகவும் கொண்ட தேசிய வளர்ச்சிக்குழு உருவாக்கப்பட்ட ஆண்டு 1952 ஆகும்.

மாநில மறுசீரமைப்புச் சட்டம் – 1956, அறிமுகமான பிறகு மண்டல குழுக்கள் உருவாக்கப்பட்டன. இதன்படி, இந்தியா ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது.

மதவாதம், பிராந்திய வாதம் மற்றும் சாதியப் பிரச்சினைகளைக் களைய மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் வகையில், மூத்த அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபலமான சமூக பொறுப்புடைய தலைவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய தேசிய ஒருமைப்பாட்டுக்குழு 1962–இல் துவங்கப்பட்டது.

**130) (C)** மத்திய அரசு செயல்படும் முறை குறித்து முழு ஆய்வு நடத்தி அறிக்கை வழங்கிய என். கோபாலசாமி அய்யங்கார் குழு 1950–இல் அமைக்கப்பட்டது.

பொது நிர்வாகம் வெளிப்படையானதாகவும், தூய்மையானதாகவும், திறம்படைத்தாகவும் விளங்குவது குறித்து அறிக்கை வழங்கிய **A.D.** கோர்வாலா குழு 1951–இல் அமைக்கப்பட்டது.

இந்திய நிர்வாக சீரமைப்பிற்கு தேவையான பரிந்துரைகளை வழங்க அமெரிக்க வல்லுநர்கள் பவுல் **H.** ஆப்பில்பே அவர்களின் தலைமையில் குழு அமைத்தது. இக்குழு 1953 மற்றும் 1956 என இருமுறை தனது பரிந்துரை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்திய நிர்வாகத்தை சீரமைக்க 1966–இல் **K.** ஹனுமந்தையா தலைமையில் நிர்வாக சீர்திருந்த ஆணையம் (ARC) அமைக்கப்பட்டது.

**131) (B)** இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946 நவம்பர் 9 அன்று நடைபெற்றது. இதன் தற்காலிகத் தலைவராக சச்சிதானந்த சின்ஹா விளங்கினார். நிரந்தர தலைவராக இராஜேந்திர பிரசாத் பதவியேற்றார். இதில் முஸ்லிம் லீக் பங்கேற்கவில்லை. இக்கூட்டம் நடைபெற்ற காலத்தில் இந்திய–பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கை பிரிட்டிஷ் அரசால் ஏற்கப்படவில்லை.

**132) (*)** நாகாலாந்து மாநில சட்டம் – 1962 இன்படி, ஒன்றுபட்ட அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு இந்தியாவின் 16–ஆவது மாநிலமாக 1963 டிசம்பர் 1 முதல் நாகாலாந்து செயல்படத்துவங்கியது. ஆனால் **TNPSC** விடைக்குறிப்பில் தெரிவு **(A)** 1961 எனத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகாலாந்தின் முழு வரலாறு மற்றும் அரியதகவல்களுக்கு நமது **Exam** மாஸ்டரின் செப்டம்பர் 2015 இதழின் 111–ஆவது பக்க சிறப்புக் கட்டுரையைப் படிக்கவும்.

**133) (A)** 1992–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 74–ஆவது சட்டதிருத்தம் நகராட்சி நிர்வாகங்கள் பற்றியது. இச்சட்டதிருத்தம் இந்திய அரசியலமைப்பில் 12–ஆவது அட்டவணையைச் சேர்க்க காரணமாக விளங்கியது.

**134) (B)** 1969 ஜூலை முதல் ஆகஸ்ட் வரை இந்தியாவின் தற்காலிக குடியரசுத் தலைவராக, அப்போது பதவி வகித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஹிதயத்துல்லா பணியாற்றியுள்ளார்.

இவரைத்தவிர,

வி.வி. கிரி (1969 மே முதல் ஜூலை வரை)

பி.டி. ஜாட்டி (1977 பிப்ரவரி முதல் ஜூலை வரை) ஆகியோர் தற்காலிக குடியரசுத்தலைவர்களாக பதவிவகித்துள்ளனர்.

**135) (C)** 1868–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தியாவின் தேசிய வருவாய் மதிப்பீட்டுக் குழுவிற்கு தலைமைத் தாங்கியவர் தாதாபாய் நௌரோஜி ஆவார். இக்குழு வெளியிட்ட வருவாய் மதிப்பீடே இந்தியாவின் முதல் வருவாய் மதிப்பீடு ஆகும்.

**136) (D)** இந்தியாவின் கிராமபுற உற்பத்தித் திறனை வெளிக்கொண்டுவரவும் கிராமப்புற உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் பிரதம அமைச்சரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் **(PSGSY)** இந்திரா வீட்டு வசதி திட்டம் **(IAY)** உள்ளிட்ட பல திட்டங்களை ஒருங்கிணைத்து 2005–ஆம் ஆண்டில் மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட திட்டமே பாரத் நிர்மாண் திட்டமாகும்.

**137) (C)** இந்தியக் குடிமக்களின் தனித்துவ அடையாளமான ஆதார் அட்டை. இந்திய தனித்துவ அடையாள ஆணையம் **(UIDAI)** மூலம் வழங்கப்படுகிறது. இது 2009 ஜனவரி 28 அன்று துவங்கப்பட்டது. இவ்வாணையம் தனது முதல் ஆதார் அட்டையை 2010 செப்டம்பர் 29 அன்று உருவாக்கியது. இந்த அட்டை மகாராஷ்டிராவைச் சார்ந்த "ரஜனா சோனாவனே" எனும் பெண்மணியுடையதாகும்.

**138) (B)** ஆறுவயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சரிவிகித உணவு, ஆரம்ப கல்வி, சிறப்பான சுகாதார வசதி போன்றவற்றை அளிப்பதற்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு பணி திட்டம் **(ICDS)** மத்திய அரசினால் 1975 அக்டோபர் 2 அன்று துவங்கப்பட்டது.

கிராமப்புறங்களின் சுகாரத்தினை மேம்படுத்தும் வகையில் 2005 ஏப்ரலில் தேசிய ஊரக சுகாதாரப்பணி திட்டம் **(NRHM)** துவங்கப்பட்டது.

தேசிய சுகாதாரக் கொள்கை கடந்த 2002–ஆம் ஆண்டில் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது. அதன் பிறகு 2015–ஆம் ஆண்டில் புதிய தேசிய சுகாதாரக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியறிவை மேம்படுத்த மத்திய அரசினால் 1986–ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை வெளியிடப்பட்டது.

**139) (B)** ஆங்கிலேயர் ஆட்சியின் போது இந்தியாவிலிருந்த நூற்றுக்கணக்கான மாகாணங்களை அரசியல் ரீதியாக ஒன்றுதிரட்டவும் ஒரே நோக்கத்தோடு அரசுடன் பேச்சு வார்த்தைகளின் ஈடுபடவும் 1927–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதுதான் குழு. அகில இந்திய மாநில மக்கள் இதன் தலைவராக 1939 முதல் 1947 வரை ஜவஹர்லால் நேரு விளங்கியுள்ளார்.

**140) (D)** சர் சையது அகமதுகான் அவர்களால் துவக்கப்பட்ட அலிகார் இயக்கமானது இந்திய முஸ்லிம்களுக்கு நவீன கல்வியளித்து நவீனமயமாக்குதலுக்கு பரிச்சயமாக்குதலை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன் ஒரு கட்டமாக 1875–ஆம் ஆண்டு அலிகாரில் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி நிறுவப்பட்டது. இவ்வியக்கம் இந்திய முஸ்லிம்களுக்கு தேசிய உணர்வூட்டுவதை ஒரு நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

**141) (B)** 1857–இல் ஏற்பட்ட பெரும் புரட்சியானது வட இந்தியா, மத்திய இந்தியா போன்ற இடங்களிலேயே பரவியது. ஆனால் அச்சமயத்தில் தென்னிந்தியா, மகாராஷ்டிரத்தின் சிலபகுதிகள் உள்ளிட்டவை அமைதியாக இருந்தன. குறிப்பாக மராத்தியர்களான சிந்தியாக்கள், ஹோல்கர்கள், கெய்க்வர்கள் போன்றோரும் ஐதராபாத் நிஜாமும் அமைதியாக இருந்தனர்.

**142) (A)** 1931–ஆம் ஆண்டு கராச்சி நகரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் கூட்டத்திற்கு தலைமை வகித்தவர் சர்தார் வல்லபாய் படேல் ஆவார். இக்கூட்டத்தில் அடிப்படை உரிமைகள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**143) (A)** a : b = 6 : 7

b : c = 8 : 9

a : b : c

6 : 7 × 8

8 : 9 × 7

$\Rightarrow$ **48 : 56 : 63**

ஆகவே,

**a : c = 48 : 63 = 16 : 21**

**144) (A)** 25 எண்களின் சராசரி = 78.4

மொத்த கூட்டுத் தொகை = 78.4 × 25

= 1960

சரி செய்யப்பட்ட சராசரி $= \frac{1960 - 69 + 96}{25}$

$= \frac{1987}{25}$

= 79.48

**145) (C)**

[B] $\xrightarrow{+3}$ [E] $\xrightarrow{+4}$ [I] $\xrightarrow{+5}$ [N] $\xrightarrow{+6}$ [T]

**146) (C)** $\sqrt{784} + x = 500$ -இன் 78%

$\Rightarrow \sqrt{784} + x = 500 \times \frac{78}{100}$

$\Rightarrow \sqrt{784} + x = 390$

$\Rightarrow 28 + x = 390$

$\Rightarrow x = 390 - 28$

$\Rightarrow x = 362$

**147) (A)** 43, 91 மற்றும் 183 ஆகிய எண்களின் மீ.பொ.வ.

= மீ.பொ.வ (91–43), (183–91), (183 – 43),

= மீ.பொ.வ 48, 92 மற்றும் 140

= 4

**148) (B)** A B C D E F G H I J K L M

Z Y X W V U T S R Q P O N

மேலே உள்ள ஆங்கில எழுத்துகளின் எதிர் இணை எழுத்துகள் தொடரில் கொடுக்கப்பட்டுள்ளன.

A $\xrightarrow{+6}$ G $\xrightarrow{+6}$ M $\xrightarrow{+6}$ [S] $\xrightarrow{+6}$ Y

Z T N [H] B

**149) (C)** முரளியின் வயதை "$x$" என்றும் அவருடைய தந்தையின் வயதை "$y$" என்றும் கொள்க.

$x = \frac{y}{2} \Rightarrow 2x = y$ ..........................(1)

மேலும்,

$y - 10 = 3(x - 10)$

$\Rightarrow y - 10 = 3x - 30$

$\Rightarrow 3x - y = 20$ ..........................(2)

(1)– இன் மதிப்பை (2)–இல் பிரதியிட்டால்,

$\Rightarrow 3x - 2x = 20$

$\Rightarrow x = 20$

$(1) \Rightarrow 2(20) \Rightarrow y = 40$

எனவே,

முரளியின் வயது = 20 ஆண்டுகள்

அவருடைய தந்தையின் வயது = 40 ஆண்டுகள்

**150) (D)**




சமபக்க முக்கோணத்தில் அனைத்துப் பக்கங்களும் சமமாக இருக்கும்.

சமபக்க முக்கோணத்தின் குத்துயரத்தை "$h$" எனக் கொள்க.

பிதாகரஸ் தேற்றத்தின் படி,




EXAM மாஸ்டர்

ஒரு செங்கோண முக்கோணத்தில் கர்ணப்பக்கத்தின் வர்க்கமானது மற்ற இரு பக்கங்களின் வர்க்கங்களுக்கு சமமானதாகும்.

$$\Rightarrow a^2 + b^2 = c^2$$

எனவே $h^2 = \left(3\sqrt{3}\right)^2 - \left(\frac{3\sqrt{3}}{2}\right)^2$

$$\Rightarrow h^2 = 27 - \frac{27}{4} = \frac{81}{4}$$

இருப்புறமும் வர்க்க மூலம் எடுப்பதால்,

$\Rightarrow h = \frac{9}{2} = 4.5$ செ.மீ.

$\therefore$ சமபக்க முக்கோணத்தின் குத்துயரம் 4.5 செ.மீ.

**151) (A)** முதல் குழாய் தொட்டியை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் = 12 மணி

இரண்டாவது குழாய் தொட்டியை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் = 6 மணி

மூன்றாவது குழாய் தொட்டியை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம் = 4 மணி

$\therefore$ மூன்று குழாய்களும் சேர்ந்து தொட்டியை நிரப்ப எடுத்துக்கொள்ளும் நேரம்

$$= \frac{12\times 6\times 4}{(12\times 6)+(6\times 4)+(4\times 12)}$$

$$= \frac{288}{72+24+48} = \frac{288}{144}$$

= 2 மணி

**152) (A)**

$x^2 + y^2 = 4xy$ ..................................(1)

(1)–ஐ $y^2$ –ஆல் வகுத்தால்,

$$\Rightarrow \frac{x^2}{y^2} + 4 = \frac{4x}{y}$$

$$\Rightarrow \left(\frac{x}{y}\right)^2 - \frac{4x}{y} + 4 = 0$$

$\frac{x}{y} = a$ எனக் கொள்க,

$\therefore a^2 - 4a + 4 = 0$

$\Rightarrow a^2 - 2a - 2a + 4 = 0$

$\Rightarrow a - (a-2) - 2(a-2) = 0$

$\Rightarrow (a-2)(a-2) = 0$

$\Rightarrow a = 2 = \frac{x}{y}$

எனவே,

$\frac{x}{y} = \frac{2}{1}$ (அல்லது) $x : y = 2 : 1$

**153) (C)** ₹ 1550–இன் ஒரு பகுதி **5%** வட்டி வீதத்தை "$x$" என்றும் மற்றொரு பகுதி **8%** வட்டி வீதத்தை **"(1550 – $x$)"** என்றும் கொள்க.

மேலும்,

$$\begin{pmatrix} x\text{ – இன் 5\% வட்டி} \\ \text{3 வருடத்திற்கு} \end{pmatrix} + \begin{pmatrix} (1550-x)\text{ – இன் 8\% வட்டி} \\ \text{3 வருடத்திற்கு} \end{pmatrix} = 300$$

$$\Rightarrow \frac{\times 5\times 3}{100} + \frac{(1550-x)\times 8\times 3}{100} = 300$$

$$\Rightarrow \frac{15x}{100} + \frac{37200-24x}{100} = 300$$

$\Rightarrow 15x + 37200 - 24x = 30000$

$\Rightarrow -9x = 30000 - 37200$

$\Rightarrow -9x = -72,000$

$\Rightarrow x = \frac{72000}{9} = 800$

எனவே, தேவையான விகிதம்

$= x : (1550 - x)$

$= 800 : (1550 - 800) = 800 : 750$

$= 16 : 15$

**154) (C)** அசல் (P) = ₹ 800

ஆண்டுகள் (N) = 3

மொத்த தொகை (A) = ₹ 920

$$\text{S.I} = \frac{P\times N\times R}{100}$$

Amount = S.I + P

S.I = 920 – 800 = ₹ 120

ஒரு வருடத்திற்கு $= \frac{120}{3} =$ ₹ 40

வட்டி (R) $= \frac{40\times 100}{800\times 1} = 5\%$

மேலும், ஒரு வருடத்திற்கு தனிவட்டி 3% அதிகரிக்கும் போது $R = (5+3)\%$

$= 8\%$

$$\Rightarrow \frac{800 \times 8 \times 3}{100} = ₹\ 192$$

$\therefore$ மொத்த தொகை $= ₹\ (800 + 192)$

$= ₹\ 992$

**155) (C)** மூலக்கூறுகளின் வடிவமைப்பு, படிகங்களின் தூய்மைத்தன்மை போன்றவற்றை ஆராய அகச்சிவப்புக் கதிர் நிறமாலைமானி பயன்படுகிறது.

பொலாரிமானி (அ) தளவிளைவுமானியானது, தளவிளைவிற்குட்பட்ட ஒளிக்கதிரை ஒளி ஊடுறுவும் கரைசலின் வழியே செலுத்தி அக்கரைசலின் தூய்மைத் தன்மையை சுழற்சிக் கோணத்தில் அடிப்படையில் அளவிட பயன்படுத்தப்படுகிறது.

பாரோமானியானது வளிமண்டல அழுத்தத்தினை அளவிடப் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் அளவிடப்படும் வளிமண்டல அழுத்தமானது மில்லிபார்களில் குறிப்பிடப்படுகிறது.

திரிபுமானியானது ஒரு பொருளின் குறிப்பிட்ட புள்ளியல் ஏற்படும் திரிபினை அளவிடப்பயன்படுகிறது. இதனைப் பயன்படுத்தி தகைவுக்குள்ளாக்கப்பட்ட ஆகாய விமானத்தின் பரப்பை சோதனையிடலாம்.

**156) (B)** கொடுக்கப்பட்ட இரு தகவல்களும் பீட்டர் W. ஹிக்ஸ் எனும் புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானியைக் குறிக்கிறது. இவர் கடவுள் துகள் எனும் ஹிக்ஸ் போசான் துகளைப் பற்றி சரியாக கணித்து முன்னறிவித்தவராவார்.

**157) (B)** $IO_3^- + aI^- + bH^+ \rightarrow cH_2O + dI_2$ எனும் சமன்பாட்டில் a, b, c, d போன்றவற்றிற்கு முறையே 5, 6, 3, 3 என்ற மதிப்புகளை பிரதியிட்டால் தான்,

$$IO_3^- + 5I + 6H^+ \rightarrow 3H_2O + 3I_2$$

என சமன்பாடு இருபுறமும் சம மதிப்புடன் சமநிலைத் தன்மையை பெறும்.

**158) (D)** $pH = P_{Ka} + \log_{10}\left(\frac{(A^-)}{(HA)}\right)$

கொடுக்கப்பட்டதிலிருந்து,

காரக்கரைசலின் மோலார் மதிப்பு $(A^-)$ – 0.20 மோ/லி

அமிலக்கரைசலின் மோலார் மதிப்பு (HA) –0.15 மோ/லி)

பிரிகை மாறிலி (Ka) $1.8 \times 10^{-5}$

சூத்திரப்படி,

$$pH = P_{Ka} + \log_{10}\left(\frac{(A^-)}{(HA)}\right)$$

$P\,Ka = -\log Ka$

$Ka = 1.8 \times 10^{-5}$

$P_{Ka} = -\log(1.8 \times 10^{-5}) = 4.7447$

$\log_{10}\left(\frac{(A^-)}{(HA)}\right) = 0.1249$

$\therefore pH = 4.8697$

**159) (C)** தாலியம் சேர்மங்கள் நச்சுத்தன்மை மிக்கவை. இவற்றை எலிபாஷனம் பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றில் பயன்படுத்துகின்றனர். இதில் உள்ள நச்சுத் தன்மையினால் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. இச்சேர்மங்கள் புகையை உண்டாக்காது.

கரிமகுளோரின் பூச்சிக் கொல்லிகள் நரம்பு மற்றும் மைய நரம்பு மண்டலத்தில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன மாறாக இவை வயிற்றுபூச்சிக் கொல்லிகளாக செயல்படுவது இல்லை.

**160) (A)** பைன் மரங்களிலிருந்து பெறப்படும் ரெசின்களை நீராற்பகுப்பு முறைகளுக்கு உட்படுத்தி டர்பன்டைன் தயாரிக்கப்படுகிறது. பைனஸ் ராக்ஸ்பர்ஜி என்பது பைன்மரத்தின் ஒரு வகையாகும்.

**161) (C)** மனித இரத்த உறைதலுக்கு மிக அவசியமான புரோத்ரோம்பின் கல்லீரலில் உற்பத்தியாகின்றது. இந்த புரோத்ரோம்பினின் அளவே இரத்த உறைதல் நிகழ்வு உடனடியாகவோ அல்லது காலம் தாழ்ந்தோ நடைபெற காரணமாகிறது.

**162) (C)** பிட்யூட்டரி சுரப்பியை பாதிக்கும் சைமன்ட் நோயினால் முடி உதிர்தல், முன்கூட்டியே வயதான தோற்றம் போன்றவை ஏற்படும்.

டையபடிஸ் மிலிடஸ் எனும் நோய் பொதுவாக டையாபடிஸ் அல்லது சர்க்கரை நோய் என்றழைக்கப்படுகிறது. இது கணையம் போதுமான இன்சுலினை சுரக்காததனால் ஏற்படுகின்றது.

குஷ்ஷிங்கின் நோயானது அட்ரீனல் சுரப்பி கார்டிசோல் திரவத்தினை அளவிற்கதிகமாக சுரப்பதினால் ஏற்படுவதாகும். இது உயர் இரத்த அழுத்தம், வலுவற்ற தசைகள் எலும்புகள் போன்றவற்றை உருவாக்கும்.

மிக்சோ எடிமா எனும் நோயானது தைராய்டு சுரப்பியில் ஏற்படும் குறைபாட்டால் உண்டாகிறது.

**163) (B)** இக்கேள்விக்கான விடை மற்றும் 2015-ஆம் ஆண்டிற்கான அர்ஜுனா விருதுகள் பற்றிய மேலும் பல தகவல்கள் நமது எக்ஸாம் மாஸ்டரின் 2015 அக்டோபர் பதிப்பில் விருதுகள் எனும் தலைப்பின் கீழ் 114-ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**164) (B)** இக்கேள்விக்கான விடை நமது எக்ஸாம் மாஸ்டரின் பல்வேறு இதழ்களில் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 'சாம்பிட்ரோடா' அவர்களின் சுயசரிதை பற்றிய தகவல், நமது எக்ஸாம் மாஸ்டரின் டிசம்பர் 2015 பதிப்பில் சிலவரிச் செய்திகள் எனும் தலைப்பின் கீழ் 26 ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**165) (A)** 2015-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் விருதுகள் பற்றிய மிக விரிவான தகவல்கள் நமது எக்ஸாம் மாஸ்டர் இதழின் டிசம்பர் 2015 பதிப்பில் விருதுகள் எனும் தலைப்பின் கீழ் 15-ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**166) (A)** தேசிய மகளிர் ஆணையத்தின் முதல் ஆண் உறுப்பினர் பற்றிய தகவல் நமது எக்ஸாம் மாஸ்டர் இதழின் டிசம்பர் 2015 பதிப்பில் சிலவரிச் செய்திகள் எனும் தலைப்பின் கீழ் 43-ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**167) (A)** இக்கேள்விக்கான விடை மற்றும் உலக ஆன்டிபயாடிக் வாரம் பற்றிய இதர தகவல்கள் நமது சுரா பதிப்பகத்தின் **TNPSC** குரூப் **IIA** சமீபத்திய செய்திகள் எனும் புத்தகத்தில் நவம்பர் - டிசம்பர் மாதபிரிவில் சிலவரிச் செய்திகளாக இடம் பெற்றுள்ளன.

**168) (D)** இக்கேள்விக்கான விடை மற்றும் நேபாளத்தின் புதிய அரசியல் சாசனம் அதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றி நமது எக்ஸாம் மாஸ்டரின் 2015 நவம்பர் பதிப்பில் சிறப்புக் கட்டுரையாக 17-ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**169) (C)** இக்கேள்விக்கான விடை மற்றும் இதர தகவல்கள் நமது எக்ஸாம் மாஸ்டர் இதழின் நவம்பர் 2015 பதிப்பில் சிலவரிச் செய்திகள் எனும் தலைப்பின் கீழ் 76-ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**170) (B)** இக்கேள்விக்கான விடையும் முதலாவது பாலின சமத்துவ மாநாடு பற்றிய இதர தகவல்களும் நமது எக்ஸாம் மாஸ்டர் இதழின் 2015 டிசம்பர் பதிப்பில் தேசியச் செய்திகள் எனும் தலைப்பின் கீழ் 101-ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

**171) (C)** இக்கேள்விக்கான விடை மற்றும் **G20** மாநாடுகள் பற்றிய இதர தகவல்கள் நமது எக்ஸாம் மாஸ்டரின் நவம்பர் 2015 பதிப்பில் தேசியம் எனும் தலைப்பின் கீழ் 95 ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும் **G20** மாநாடு பற்றிய சிறப்புக் கட்டுரைகளும் செய்திகளும் நமது எக்ஸாம் மாஸ்டர் இதழ்களில் வெளியாகியுள்ளன.

**172) (B)** அரக்கு பள்ளத்தாக்கு என்பது ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு புகழ்பெற்ற மலைவாசஸ்தலமாகும்.

குல்மார்க் என்பது ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலுள்ள பாரமுல்லா மாவட்டத்தின் பீர்பாஞ்சல் மலைத் தொடரில் கடல் மட்டத்திலிருந்து 2650 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற மலைவாசஸ்தலமாகும்.

குலு என்பது இமாச்சலப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு மாவட்டம் புகழ்பெற்ற மலைவாசஸ்தலமும் ஆகும்.

ஷில்லாங் என்பது வடகிழக்கு இந்தியாவில் அமைந்துள்ள மேகாலயாவின் தலைநகரும் புகழ்பெற்ற மலைவாசஸ்தலமும் ஆகும்.

**173) (B)** ரோமானியர்கள் தமிழகத்தில் விளையும் மிளகு, இலவங்கம், ஏலக்காய் போன்றவற்றையும் பிறவாசனைப் பொருட்களையும் பட்டு போன்ற துணி வகைகளையும் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக தங்கத்தை அளித்தனர். இதனால் ரோமின் செல்வம் தமிழகத்திற்கு வடியத்துவங்கியதாக வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

**174) (A)** இந்திய பாரம்பரிய இசையில் புல்லாங்குழல் வாசிப்பதில் தலை சிறந்து விளங்கும் இராஜேந்திர பிரசன்னா உத்திரப்பிரதேசத்தின் வாரணாசியில் வசித்து வருகின்றனார்.

ஹிந்துஸ்தானி இசையில் தபேலா வாசிப்பதில் சிறந்து விளங்கும் ஜாகிர் ஹுசைன் மும்பையில் வசித்து வருகின்றார்.

நிஷாத்கான் கொல்கத்தாவைச் சார்ந்த தலைசிறந்த சிதார் இசைக்கலைஞர் ஆவார்.

புகழ்பெற்ற சரோட் இசைக்கலைஞரான அலி அக்பர் கான் வங்க தேசத்தினைச் சார்ந்தவராவார். இவர் கடந்த 2009-இல் மறைந்தார்.

**175) (A)** பம்பாய் இரயில் நிலையம் 1953–ஆம் ஆண்டு, பாம்பே – தானே இரயில்பாதை திட்டத்தின் ஒரு பகுதியாகத் திறக்கப்பட்டது. இது இந்தியாவின் முதல் இரயில் நிலையம் ஆகும்.

இராயபுரம் இரயில் நிலையமானது 1856–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது தமிழகத்தின் முதல் இரயில் நிலையமாகும்.

இரயில் பாதைகள் அதிக அளவில் அமைக்கப்பட்ட பொழுது தேவையை நிறைவு செய்யும் விதமாக 1873–ஆம் ஆண்டு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் உருவாக்கப்பட்டது.

எழும்பூர் இரயில் நிலையம் 1908–ஆம் ஆண்டு தென்னகப் பகுதிகளை இணைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது.

**176) (D)** அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகத் திகழ்ந்த டாக்டர் வி. இராஜேந்திர பிரசாத், அரசியலமைப்பு நிர்ணய சபையின் நடைமுறைவிதிகள் குழு, தலைமைக்குழு, வழிகாட்டுக்குழு, தேசியக் கொடிக்கான இடக்காலக்குழு போன்றவற்றிற்குத் தலைவராகத் திகழ்ந்துள்ளார்.

**177) (B)** இந்திய அரசியலமைப்பின் பகுதி மூன்றில் ஷரத்து 14 முதல் 35 வரை அடிப்படை உரிமைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

இதில் 19 முதல் 22 வரையிலான ஷரத்துகள் சுதந்திர உரிமையுடன் தொடர்புடையவை. இச்சுதந்திர உரிமையில் ஷரத்து 21 (a) ஆனது 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்து இந்தியக் குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்வியளிப்பதை நோக்கமாக கொண்டதாகும்.

**178) (C)** 2005–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி மாநில தலைமைத் தகவல் ஆணையரை **(Chief Election Commissioner)** நியமிக்க ஆளுநருக்கு பரிந்துரை செய்யும் குழுவில் முதலமைச்சர் எதிர்கட்சித் தலைவர் மற்றும் ஒரு மூத்த கேபினட் அமைச்சர் ஆகியோர் இடம் பெறுவர்.

**179) (B)** பிரிட்டிஷாரால் 1937 அக்டோபர் 1 அன்று துவங்கப்பட்ட பெடரல் கோர்ட் இந்திய சுதந்திரத்திற்குப் பின்பும் அவ்வாறே தொடர்ந்து வந்தது. இந்தியாவிற்கென உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு சாசனம் 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த பிறகு, இந்திய அரசியலமைப்பு சாசனப்படி 1950 ஜனவரி 28 அன்று இந்திய உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டு செயல்படத்துவங்கியது.

**180) (B)** மத்திய அரசின் வரவு செலவுகளை ஆய்வு செய்யவும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் இந்திய அரசு தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கைகளை ஆய்வு செய்யவும் நியமிக்கப்படும் பாராளுமன்ற பொதுக் கணக்கு குழுவின் தலைவரை மக்களவை சபாநாயகர் நியமனம் செய்வார். 1967–ஆம் ஆண்டு முதல் இக்குழுவின் தலைவராக எதிர்கட்சியைச் சார்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார். இவ்வாறு ஒரு உறுப்பினர் பொதுக்கணக்கு குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட லோக் சபாவில் 15 உறுப்பினர்கள் மற்றும் இராஜ்ஜியசபாவில் 7 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

**181) (C)** அரசியலமைப்பின் ஐந்தாவது பகுதியின் கீழ்வரும் விதி எண் 85–இன்படி பாராளுமன்றத்தின் இரு அவைகளைக் கூட்டவோ அல்லது ஒத்திவைக்கவோ இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**182) (A)** நிர்மல் பாரத் அபியான் என்பது கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 1999–ஆம் ஆண்டு மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.

பிரதான் மந்திரி கிராம் சதக்யோஜனா என்பது கிராமப்புற சாலைகளை மேம்படுத்தும் நோக்குடன் 2000 டிசம்பர் 25 அன்று மத்திய அரசினால் கொண்டுவரப்பட்ட திட்டமாகும்.

கிராமக் கட்டமைப்பு திட்டம் என்பது, 2006 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் **MGRNES** திட்டமாகும்.

தமிழக வாழ்விட மேம்பாட்டுத்திட்டம் என்பது அனைத்து வாழ்விடங்களுக்கும் அடிப்படை கட்டமைப்பு வசதி செய்து தரும் நோக்குடன் மாநில அரசால் துவக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

**183) (C)** 1997 முதல் 2002 வரை செயல்படுத்தப்பட்ட ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தபட்ச அடிப்படைத் சேவைகள் **(BMS)** எனும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர், அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் ஆரம்ப சுகாதார வசதி போன்ற அம்சங்களை கொண்டிந்தது. ஆனால் இதில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பற்றிய அம்சம் இடம் பெறவில்லை.

**184) (C)** கினி கெழு, கினி குறியீட்டெண், கினி விகிதம் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் கினி கெழுவானது நாட்டின் வருவாய் பகிர்வை காட்டும் புள்ளியியல் குறியீடாகும். இது பொதுவாக மக்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அளக்க பெரிதும் பயன்படுகின்றது.

**185) (B)** 1998 ஜூலை 3 அன்று குடியரசுத் தலைவரால் 2000–05 வரையிலான காலகட்டத்திற்காக பேராசிரியர் ஏ.எம். குஸ்ரோ தலைமையில் நியமிக்கப்பட்ட 11–ஆவது நிதி ஆணையம் மத்திய அரசின் அனைத்து வரிகளின் நிகர வருவாயில் மாநிலங்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க பரிந்துரை செய்தது.

**186) (B)** 1992–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நகர பஞ்சாயத்து ராஜ் சட்டத்திருத்தமானது, நகர சபையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பெண்களுக்கு $\frac{1}{3}$ பங்கு இடங்கள் ஒதுக்கப்படவேண்டும் என அறிவுறுத்துகிறது. இச்சட்டதிருத்தம் 1993 ஆகஸ்ட் 1 முதல் நடைமுறைக்கு வந்தது.

**187) (C)** கோட்டயம் அருகே உள்ள 'வைக்கமில்' அமைந்திருந்த 'சிவன்' கோவிலுக்குள் நுழைய அனைத்து சமுதாயத்தினருக்கும் உரிமையளிக்கவேண்டும்என்றகோரிக்கையை முன்னிறுத்தி 1924–25 வரை நடந்த வைக்கம் போராட்டத்தில், கேரள மாகாண காங்கிரஸின் தீண்டாமை ஒழிப்பு குழுவின் தலைவரான கே. கேளப்பன் முக்கியப் பங்காற்றினார்.

1934–ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசுக்குள் சோஸலிஸக் கருத்துக்கள் கொண்ட கட்சி காங்கிரஸ் சோசலிஸக் கட்சி **(CSP)** துவக்கப்பட்டது. இதன் பொதுச்செயலாளராக ஜே.பி. நாரயணனும், தலைவராக ஆச்சார்ய நரேந்திர தேவாவும், மினு மஸானி கூடுதல் செயலராகவும் பதவியேற்றனர்.

பண்டிட் மதன்மோகன் மாளவியா, இந்து மகாசபையின் முன்னோடியாக லாலா லஜபதிராய் அவர்களால் துவக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபாவின் தலைவராகவும், 1915–இல் ஹரித்துவார் கும்பமேளாவில் துவங்கப்பட்ட இந்து மகாசபையின் கயா மற்றும் காசியில் முறையே 1922 மற்றும் 1923–இல் நடைபெற்ற வருடாந்திர கூட்டத்திற்கு தலைவராகவும் விளங்கியுள்ளார்.

**188) (A)** அசல் (P) = ₹ 1200

தொகை (A) = ₹ 1348.32

ஆண்டுகள் (N) = 2

$$\frac{A}{P} = \left(1+\frac{R}{100}\right)^N$$

$$\Rightarrow \frac{1348.32}{1200} = \left(1+\frac{R}{100}\right)^2$$

$$\Rightarrow \frac{1348.32}{1200} = \frac{(100+R)^2}{100\times100}$$

$$\Rightarrow \frac{1348.32\times100\times100}{1200} = (100+R)^2$$

$$\Rightarrow \frac{134832}{12} = (100+R)^2$$

$$\Rightarrow 11236 = (100 + R)^2$$

இருபுறமும் வர்க்கமூலம் எடுத்தால்,

$$\Rightarrow 106 = 100 + R$$

$$\Rightarrow R = 106 - 100 = 6\%$$

**189) (D)**

| ஆட்கள் | நேரம் | நாட்கள் |
|---|---|---|
| 7 ↑ | 9 ↓ | 30 ↓ |
| 10 | 7 | $x$ |

$$\Rightarrow x = \frac{7}{10}\times\frac{9}{7}\times30 = 27 \text{ நாட்கள்}$$

190) (C) $5 \oplus 3 \Rightarrow 5^2 + 3^2 = 25 + 9 = 34$

$6 \oplus 2 \Rightarrow 6^2 + 2^2 = 36 + 4 = 40$

$\therefore 7 \oplus 1 \Rightarrow 7^2 + 1^2 = 49 + 1 = 50$

191) (D) 6 மணிகள் முதலில் ஒருமுறை ஒன்றாகவும் பின்னர், 2, 4, 6, 8, 10 மற்றும் 12 வினாடிகள் இடைவெளியிலும் ஒலிக்கின்றன.

2, 4, 6, 8, 10 மற்றும் 12–இன் மீ.சி.ம. = 120 எனவே, ஒவ்வொரு 120 வினாடிகளுக்கும் 6 மணிகள் சேர்ந்து ஒலிக்கும்.

30 நிமிடத்தில், அவை $= \frac{30}{2} + 1 = 16$ முறை ஒலிக்கும்

<u>குறிப்பு:</u> (இடைவெளிகளுக்கு முன் 6 மணிகள் சேர்ந்து ஒரு முறை ஒலித்தன. அதனையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்)

192) (B) $\frac{a}{b} = \frac{4}{5} \Rightarrow a = \frac{4b}{5}$ ..................(1)

$\frac{b}{c} = \frac{15}{16} \Rightarrow c = \frac{16b}{15}$ ................(2)

$$\therefore \frac{c^2 - a^2}{c^2 + a^2} = \frac{\left(\frac{16b}{15}\right)^2 - \left(\frac{4b}{5}\right)^2}{\left(\frac{16b}{15}\right)^2 + \left(\frac{4b}{5}\right)^2}$$

$$= \frac{\frac{256b^2}{225} - \frac{16b^2}{25}}{\frac{256b^2}{225} + \frac{16b^2}{25}}$$

$$= \frac{b^2\left[\frac{256-144}{225}\right]}{b^2\left[\frac{256+144}{225}\right]}$$

$$= \frac{\frac{112}{225}}{\frac{400}{225}}$$

$$= \frac{112}{225} \times \frac{225}{400}$$

$$= \frac{112}{400} = \frac{7}{25}$$

193) (A) கொடுக்கப்பட்டுள்ள தொடரில் "36" –ஐ தவிர 25, 49, 81, 121, 169, 225 ஆகிய அனைத்தும் ஒற்றைப்படை வர்க்க எண்கள் ஆகும்.

194) (B) A–மட்டும் ஒரு வேலையை செய்ய எடுத்துக்கொள்ளும் நாட்கள்

= 12

B என்பவர் A –யைக் காட்டிலும் 60% அதிக திறன் உடையவர்

அதாவது,

$$B = \frac{60}{100} \times A \Rightarrow \frac{3}{5}\ A$$

| நபர் | நாட்கள் |
|---|---|
| A | 12 |
| $\frac{3A}{5}$ ↓ | ? ↓ |

$$\Rightarrow \frac{3}{5} \times 12 = \frac{36}{5}$$

$= 7\frac{1}{2}$ நாட்கள்

195) (D) $5^a = 6$ ....................................(1)

$6^b = 7$ ....................................(2)

$7^c = 5$ ....................................(3)

(1)–ஐ (2)–இல் பிரதியிட்டால்,

$5^{ab} = 7$ ....................................(4)

(4)–ஐ (3)–இல் பிரதியிட்டால்,

$5^{abc} = 5 \Rightarrow 5^{abc} = 5^1$

இரண்டு அடுக்குகளையும் ஒப்பிடும்போது,

$abc = 1$

196) (C) $= \sqrt[x]{\sqrt[y]{\sqrt[z]{a}}}$

$= \sqrt[x]{\sqrt[yz]{a}} = \sqrt[xyz]{a}$

**197) (D)** அசல் (P) = ₹ 2000

வட்டி (R) = 8%

ஆண்டுகள் (N) = ?

தொகை (A) = 2P = 2 × 2000

$= ₹ 4000$

$\therefore A = P + S.I$

$$\Rightarrow 4000 = 2000 + \frac{2000 \times 8 \times N}{100}$$

$$\Rightarrow 4000 - 2000 = 160\,N$$

$$\Rightarrow 2000 = 160\,N$$

$$\Rightarrow N = \frac{2000}{160}$$

$= 12\frac{1}{2}$ ஆண்டுகள்

**198) (A)**




செவ்வகத்தின் பரப்பளவு = $l \times b = lb$ செ.மீ.

மேலும்,

செவ்வகத்தின் நீளம் 60% அதிகரிக்கப்படுபோது, அதன் பரப்பளவு முன்பு இருந்ததைப் போலவே இருக்க அதன் அகலமானது குறைக்கபட வேண்டிய சதவீதம்,

$$\left(l + \frac{60}{100} \times l\right) \times \left(b - \frac{x}{100} \times b\right) = lb$$

$$\Rightarrow \frac{160\,l}{100} \times \frac{(100 - x)\,b}{100} = lb$$

$$\Rightarrow 100 - x = \frac{lb \times 100 \times 100}{160\,l \times b}$$

$$\Rightarrow 100 - x = \frac{10000}{160}$$

$$\Rightarrow 100 - x = 62.5$$

$$\Rightarrow x = 100 - 62.5 = 37.5$$

எனவே, பரப்பளவு குறையாமல் இருக்க செவ்வகத்தின் அகலம் $37\frac{1}{2}\%$ குறைக்கப்படவேண்டும்.

**199) (B)** ₹ 53–ஐ A, B மற்றும் C மூவருக்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

A + B + C = 53 ............................(1)

மேலும்,

A = B + 7 ............................(2)

B = C + 8 ............................(3)

(2)–ஐ (3)–இல் பிரதியிட்டால்,

A – 7 = C + 8

⇒ A = C + 15 ............................(4)

(3) மற்றும் (4)–ஐ (1)–இல் பிரதியிட்டால்,

⇒ C + 15 + C + 8 + C = 53

⇒ 3C = 53 – 23 ⇒ 3C = 30

⇒ C = 10

(3) ⇒ B = 10 + 8 = 18

(4) ⇒ A = 10 + 15 = 25

A, B மற்றும் C –இன் விகிதம்

⇒ A : B : C = 25 : 18 : 10

**200) (B)**




மூன்று வடிவங்களும் ஒரே அளவு கொண்ட அடிபகுதியையும், சமமான உயரத்தையும் கொண்டுள்ளன எனில், அவற்றின் கன அளவுகளின் விகிதம்,

$$\Rightarrow \frac{1}{3}\pi r^2 h : \frac{2}{3}\pi r^3 : \pi r^2 h$$

$$\Rightarrow \frac{1}{3}\pi r^3 : \frac{2}{3}\pi r^3 : \pi r^3 \qquad (\because r = h)$$

$$\Rightarrow \frac{1}{3} : \frac{2}{3} : 1 \quad \Rightarrow 1 : 2 : 3$$